## சுருக்கம்

கலை பண்பாட்டுத் துறை – அறிவிப்புகள் – 2019–2020 – தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகம் – புதியதாக இசைக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல் – ரூ.32.92 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (பண்–2) துறை**

அரசாணை (நிலை) எண். 180

நாள் 29.11.2019
திருவள்ளுவர் ஆண்டு 2050
விகாரி வருடம், கார்த்திகை–13

படிக்கப்பட்டது:-

கலை பண்பாட்டுத் துறை ஆணையரின் கடிதம்
ந.க.எண். 3946 /அ3 /2019, நாள் 20.09.2019.

*****

ஆணை:–

15.07.2019 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2019–2020ஆம் ஆண்டு கலை பண்பாட்டுத் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:-

> "தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகத்தில் பயிலும், முதுகலை/முதுகவின்கலை பட்டப்படிப்பு மற்றும் பொதுப்பிரிவில் பயிலும் மாணாக்கர்களின் கல்வி நலன் கருதி, புதியதாக இசைக்கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்கப்படும். இதற்கென, தொடராச் செலவினமாக ரூ.32.92 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்."

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், கலை பண்பாட்டுத் துறை ஆணையர் அவர்கள் தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் அரசு இசைக்கல்லூரிகள், கவின்கலைக் கல்லூரிகள், கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரி ஆகியவை செயல்பட்டு வருவதாலும், முனைவர் பட்ட ஆய்வு (Ph.D) பாடத்திட்டம் மற்றும் ஆய்வியல் நிறைஞர் (M.Phil) பாடத்திட்டம் ஆகியவை இப்பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்டு வருவதாலும், ஆராய்ச்சி, ஆவணமாக்குதல், ஒலி மற்றும் ஒளிப்பதிவுகள் பிரசுரம் செய்தல் ஆகிய பல்வேறு பணிகள் இப்பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்படுவதாலும், மாணாக்கர்களுக்கு தரமான கல்வியினை வழங்குவதற்கு பல்கலைக்கழகத்தில் இசைக்கருவிகள், துணைப் பொருட்கள், சாதனங்கள் மற்றும் தளவாடப் பொருட்கள் நல்ல தரமான நிலையில் இருத்தல் வேண்டும் என்பது அவசியமாகிறது என்பதால், தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப்

(த.பி.பா)

பல்கலைக்கழகத்திற்கு இசைக்கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்கு தொடராச் செலவினமாக ரூ.32.92 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து உரிய ஆணை வழங்குமாறு அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

3. கலை பண்பாட்டுத் துறை ஆணையரின் கருத்துருவினை ஆய்வு செய்து, அதனை ஏற்று, தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகத்தில் பயிலும் முதுகலை/முதுகவின்கலை பட்டப்படிப்பு மற்றும் பொதுப்பிரிவில் பயிலும் மாணாக்கர்களின் கல்வி நலன் கருதி, இவ்வாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள செலவின விவரப்படி புதியதாக இசைக் கருவிகள் மற்றும் உபகரணங்களை Government E-Marketing (GEM) / எல்காட் மூலம் கொள்முதல் செய்வதற்கு 2019–2020ஆம் நிதியாண்டில் தொடராச் செலவினமாக ரூ.32,92,000/– (ரூபாய் முப்பத்திரெண்டு இலட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:–

"2205 00 கலையும் பண்பாடும் – 102 கலை பண்பாட்டை வளர்த்தல் – மாநிலச் செலவினங்கள் – AM தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக் கழகத்திற்கு மானியங்கள் – 309 உதவித் தொகை – 01 நடப்புச் செலவுக்கான உதவித்தொகை"

(பு.த.தொ.கு. எண் 2205 00 102 AM 30901)

(ப.த.தொ.கு. எண் 2205 00 102 AM 0910)

5. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்திற்கு தேவைப்படும் கூடுதல் நிதி ரூ.32,92,000/–ஐ 2019–2020–ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கம் சிறப்பு நிகழ்வாக ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய செலவினத்தை எதிர்நோக்கி மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. இருப்பினும் சட்டமன்றத்தின் ஒப்புதலை பெறும் பொருட்டு, ஒரு சிறப்பு நிகழ்வாக கருதி (SI) இச்செலவினத்தை 2019–2020ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட வேண்டும். இச்செலவினத்திற்கான உரிய கருத்துருவினை 2019–2020 திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கம் மற்றும் துணை மதிப்பீடுகளில் (Supplementary Estimates 2019–2020) சேர்க்கத் தக்க வகையில் உரிய விவரங்களுடன் நிதி (கல்வி–II/வ.செ.பொது–I)த் துறைக்கு அனுப்புமாறு கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சாரா எண். 57448/நிதி (கல்வி –II)த் துறை/2019, நாள் 29.11.2019–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண். 2321 (இரண்டாயிரத்து முன்னூற்று இருபத்து ஒன்று)

(ஆளுநரின் ஆணைப்படி)

அஷோக் டோங்ரே
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர், கலை பண்பாட்டுத் துறை, சென்னை–8.
பதிவாளர், தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகம், சென்னை –28
(கலை பண்பாட்டுத் துறை ஆணையர் வழியாக)

சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–9. (இருபடிகள்)
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (G&SSA/ E&RSA/ A&E), சென்னை–18.
உள்ளுறை தணிக்கை அலுவலர், முதன்மை கணக்காய்வுத் தலைவர்
(பொது மற்றும் சமூக பகுதி) அலுவலகம், சென்னை–9.

நகல்:-

மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9
மாண்புமிகு துணை முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9
மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலர், சென்னை –9
நிதி(கல்வி–II/ வ.செ.பொ.I)த் துறை, சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலர்,
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை–9.
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்(பண்–1/பொது)த் துறை, சென்னை– 9.
தொழில்நுட்ப இயக்குநர், தேசிய தகவல் மையம், சென்னை –9.
இருப்புக்கோப்பு / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

2.12.2019

பிரிவு அலுவலர்

2.12.19

## இணைப்பு

அரசாணை (நிலை) எண். 180, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (பண்–2) துறை, நாள் 29.11.2019

**I. Purchase of Musical Instruments and Accessories for PG- MA Courses**

| S. No | Name of the Department | Name of the musical instrument | @ Rate (in Rs) | Accessories | @ Rate (in Rs) | Total Amount ( in Rs ) |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. | M.A.Vocal | Shruti box (1No) | 5,500 | Extension cord- 1 No | 500 | 6,000 |
| 2. | M.A.Veena | Shruti box (1No) | 5,500 | Strings set -5<br>Cutting plier -1 No | 80<br>100 | 6,000 |
| 3. | M.A.Violin | Violin ( 2Nos)<br>Bow (2 Nos) | 5,000<br>800 | Strings roll - 10 Nos<br>Rosin - 5 Nos<br>Cutting pliers- 1 No | 100<br>100<br>100 | 13,200 |
| 4. | M.A. Nadaswaram | Nadaswaram – $2^{1/2}$ Sruthi-(3Nos) | 6,500 | Extension box- 2 Nos | 500 | 20,000 |
| 5. | M.A- Bharathanatyam | Thattu Kazhi (10Nos)<br>Thalam – 2 sets | 100<br>600 | | | 2,200 |
| | | | | | Total | Rs. 47,400 |

**II. Purchase of Equipments /Furniture Items for MFA Courses.**

| S. No | Description | Qty | @ Rate ( in Rs) | Total ( in Rs) |
|---|---|---|---|---|
| I. | **MFA(Painting/ Textile Design)** | | | |
| 1. | Drawing table $2^{1/2}$x$2^{1/2}$ | 20 Nos | 1000 | 20,000 |
| | Adjustable stand 3x3 | 20 Nos | 5000 | 1,00,000 |
| 2. | ESAL Stand- Wooden large piece- 6 ft | 15 Nos | 6000 | 90,000 |
| 3. | Display board – 4x8 | 20 Nos | 2500 | 50,000 |
| | Wooden stand – 9 ft | 30 Nos | 1500 | 45,000 |
| 4. | Model table (wood) (portrait) – 5x5 | 1 No | 10000 | 10, 000 |
| 5. | Mirror – 6x4 – Self drawing<br>Mirror – 3x2- Self drawing | 1 piece<br>1 piece | 5,000<br>5,000 | 10,000 |
| 6. | Artist human manikin Big and small size | 2 Qty | 2,500 | 5,000 |
| 7. | Wooden geometrical form different shape-(sets) | 2 Nos | 2,500 | 5,000 |
| 8. | Wooden table and chairs –21/2x31/2 | 15 Nos | 9,000 | 1,35,000 |
| 9 | Wooden chairs | 30 Nos | 6,000 | 1,80,000 |
| 10 | Etching machine (Printing - Graphic Art) | 1 No | 2,00,000 | 2,00,000 |
| | | Total | | 8,50,000 |

(த.பி.பா)

| | | | | |
|---|---|---|---|---|
| II. | **MFA(Visual communication and Design)** | | | |
| 1. | Canon 5D mark -IV camera (Tripod, Battery, Memory card, lence-1) | 2 Nos | 4,70,000 | 9,40,000 |
| 2. | Canon Basic model Still cameras | 5 Nos | 35,000 | 1,75,000 |
| 3. | Tripod | 7 Nos | 3,000 | 21,000 |
| 4. | Lighting tools | | | 30,000 |
| 5. | Tracing table – 5x4 | 1 No | 20,000 | 20,000 |
| 6. | Editing studio (MAC system, Audio video editing) | | | 5,00,000 |
| 7. | Shelf and cupboard wood for students (2x 3 ft) | 20 Nos | 5,000 | 1,00,000 |
| 8. | Bero steel | 5 Nos | 15,000 | 75,000 |
| | | | **Total** | **18,61,000** |
| III. | **Use of P.G Students** | | | |
| 1. | Plastic chairs (Arm) | 100 Nos | 650 | 65,000 |
| 2. | General Library furniture ( Wooden Plain table 6'x4') | 4 Nos | 28630 | 1,14,520 |
| 3. | Teak wood chair Model TWCHR-007 | 32 Nos | 6770 | 2,16,640 |
| 4. | Wooden Cupboard | 3 Nos | 45820 | 1,37,460 |
| | | | **Total** | **5,33,620** |
| | **Grand Total (Rs.47,400 + 8,50,000+18,61,000+5,33,620)** | | | **32,92,020 r/o 32,92,000** |

அஷோக் டோங்ரே
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

//உண்மை நகல்//

2.12.2019

பிரிவு அலுவலர்

2.12.19